# கடற்கரை கவியரங்கு– 652

நாள்: **03-08-2025**

## ஓரெழுத்து பொருள் தருதல் தமிழில் உண்டே!

**தா** என்றால் தந்திடவும்
**வா** என்றால் வந்திடவும்
**போ** என்றால் போய் விடவும்,
**கா** என்றால் காத்திடவும்,

**சீ** என்று சீறிடவும்
**தூ** என்று தூற்றிடவும்,
**சா** என்று சபித்திடவும்,
**ஆ** யென்று பயத்தையும்,
ஆச்சரியத்தையும் அழகாய்க்
கூறுவதோடு, **பசு** வென்று
பழந் தமிழும் கூறும் தானே!

**நீ** என்று சுட்டுவதும்,
**தீ** என்று பொசுக்குதும்,
**ஊ** என்று அழற்றுவதும்,
**ஓ!** என்று புரிதலும்,
**ஈ** என்றால் பூச்சியாக,
**கை** என்றால் உறுப்புமாக,
**பூ** என்றால் மலர்கள் தானே?

**ஐ!** என்று மகிழ்வைச் சுட்டும்
மழலையும் தமிழே யன்றோ!
**கோ** என்றால் தலைவனாகும்,
கொஞ்சு தமிழுக்கு, மண்ணில்
இணைதான் ஏது சொல்வீர்?

ஓரெழுத்தில் தமிழ் மணக்கும்!
ஒவ்வொரு சொல்லும்
பொருளே ஆகும்!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்.** 03-08-2025 (மாலை 05:15)